# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

*[2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 9/2011*

**இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய்கொண்டதும் இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்பட்டதுமான ஒவ்வொரு பொருளின் துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு என அழைக்கப்படவேண்டிய அறவீடு ஒன்றினை விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் I இனைத் திருத்துவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

## பாகம் I

### துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டை விதித்தல்

*இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான அறவீடு.*

**2.** ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய்கொண்டதும், இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படுகின்றதுமான ஒவ்வொரு பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற்கேழ்வுப் பெறுமதி என்பவற்றின்மீது (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "அறவீடு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு என அழைக்கப்படவேண்டிய அறவீடொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

*அறவீட்டைக் கணிப்பீடு செய்யும்முறை.*

**3.** (1) இரண்டாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற்கேழ்வுப் பெறுமதி தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய அறவீடு 2011, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப் பகுதிக்கு 5 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து -

(அ) பதனிடப்பட்டு மீள் ஏற்றுமதிசெய்யும் நோக்கத்திற்கு ; அல்லது

(ஆ) ஏற்றுமதிக்கான பண்டங்களின் உற்பத்திக்குப் பயன் படுத்துவதற்கென,

இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் கேழ்வுப் பெறுமதி தொடர் பில் அறவீடெதுவும் விதிப்பனவு செய்யப்படுதலாகாது.

(3) அமைச்சர் தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளி யிடப்படும் கட்டளைமூலம் :-

(அ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளை மேற்படி அறவீட்டின் நடைமுறையிலிருந்து விலக் களிக்கலாம் ; அல்லது

(ஆ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது எவையேனும் பொருட்கள் தொடர்பில் விதிப்பனவுசெய்யப்பட்டு அறவிடப்படவேண்டிய சலுகை வீதமொன்றைக் குறித்துரைக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் -

(i) அதற்கு அமைச்சரின் கையொப்பம் பொறிக்கப் பட்டதன்மீது உடனடியாக நடைமுறையிலிருத் தலும் ;

(ii) வசதியான அளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் ;

(iii) அதன்பின்னர் வசதியான அளவு விரைவாக பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலம் அங்கீகரிக் கப்படுதலும் ; அத்துடன்

(iv) *பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாது விடில் அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப் படுதலும்,*

வேண்டும்.".

குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் அறவீடு எதுவும் விதிக்கப்படுதலாகாது.

***4***. *(1) பின்வரும் பொருட்கள்*, *துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

(i) *(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இயைபான ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான வெளிநாட்டு நாணயத்தாள்கள் ;*

(ii) *தேசிய பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகள்மீது இலங்கையில் நடாத்தப் படும் சர்வதேச நிகழ்வுகளின் பயன்பாட்டுக்கான பண்டங்கள் ;*

(iii) *நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அரசாங்க அமைச்சுக்களுக்கு நேரடியாக நன்கொடைகளிலிருந்து ஏதேனும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான பண்டங்கள் ;*

(iv) *தேசிய பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்*

பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வாறான வெளிநாட்டுக் கடன்கள்மூலம் நிதி யளிக்கப்பட்டவையும் அவற்றின்மீது கருத்திட்ட வரி அரசாங்கத்தினால் பொறுப்பிக்கப்பட்ட வையுமான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான பண்டங்கள் ; அத்துடன்

(V) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரானவர் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் வேறேதேனும் பொருளை விலக்களிக்கப்பட்ட பொருளொன் றாக வெளிப்படுத்தலாம்.

(2) 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி நாட்டின் பொருளா தாரத்தின் எந்த நலன்மீது அரசாங்கத்தினால் வரி பொறுப் பேற்கப்படுகின்றதோ அந்த நலனைக் கருத்திற்கொண்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றினால் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் இனங் காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின் பயன்பாட்டிற்கு ஏதேனும் பொருளின் இறக்குமதியின்மீதான அறவீட்டின் சேகரிப்பை 2009, யூலை 1 ஆம் தேதியிலிருந்து அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின்மீது வருமதி யான வரித்தொகையை மேவும் கூட்டிணைப்பு உத்தர வாதமொன்று கொடுத்துதவப்படுவதற்கு அமைய அத்தகைய கருத்திட்டம் பூர்த்தியடைவதன் பின்னர் பொருள் மீள் ஏற்றுமதி செய்யப்படும் அத்தகைய நேரம்வரை பிற்போடுதல் வேண்டும்.

அறவீடானது சுங்கப் பணிப்பாளர் தலைமையதி பதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**5**. இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படும் பொருளொன்றின் மீது 2 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு, அப்பொருள் இறக்குமதிசெய்யப்படும் நேரத்தில் அப்பொருளை இறக்குமதிசெய்யும் ஆளினால் சுங்கப் பணிப்பாளர் தலைமை யதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அறவீட்டுக் கொடுப்பனவின்மேல், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி அப் பொருள் தொடர்பான இறக்குமதி அனுப்பு பொருட்பட்டியல் மீது அறவீடாகப் பெறப்படும் தொகையைக் குறித்துரைத்து செய்யப்படவேண்டிய புறக்குறிப்பொன்றை இடச் செய்வித்தலும் வேண்டும்.

**6.** இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய்கொண்டதும் இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படுகின்றதுமான ஏதேனும் பொருள் :- குறித்தசில பொருட்களின் கொள்வனவு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டவையெனக் கருதப்படும்.

(அ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது செலுத்தப்படற்பாலதெனக் கருதப்படுவதான ஏதேனும் சுங்கத் தீர்வையை, மிகைக் கட்டணத்தை அல்லது வேறு அறவீட்டை அறவிடுவதற்காக அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏதேனும் மீறுகைக்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விற்கப்படுமிடத்து ; அல்லது

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை சட்டத்தின்கீழான எவையேனும் வருமதிகளை அறவிடுவதற்காக, அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் விற்கப்படுமிடத்து ; அல்லது

(இ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எவையேனும் வரிகளுக்காக, அவரினால் விற்கப்படுமிடத்து,

அப்பொருளின் கொள்வனவுகாரர், 5 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அப்பொருளை இறக்குமதிசெய்யும் ஆளெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கொள்வனவுகாரருக்கு இணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**7.** எந்த அரசின் தூதுக்குழுவொன்றிற்கு அல்லது ஒழுங்கமைப்பிற்கு ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்றதோ அந்த ஏதேனும் அரசின் தூதுக் குழுவினால் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பினால் ஏதேனும் சேவை வழங்கப்படுவது தொடர்பில் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் பொருளுக்கு 2 ஆம் பிரிவிலுள்ளதெதுவும் ஏற்புடையதாதலாகாது. விலக்களிப்புகள்.

அறவீடானது அறவிடப் படுவதற்கு சுங்கக் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல்.

**8**. அறவீட்டை அறவிடும் நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அறவீடானது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப் படற்பாலதான சுங்கத் தீர்வையொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, 235 ஆம் அத்தியாயமான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

அறவீடாக அறவிடப்பட்ட தொகை, திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல்.

**9**. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, அறவீடாக இச்சட்டத்தின்கீழ் அவரினால் அறவிடப்படும் எல்லாப் பணத் தொகைகளையும் திரட்டுநிதியத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொருள்கோடல்.

**10**. இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, "பொருள்" என்பது, எவையேனும் பண்டங்கள், ஆக்கப்பொருட்கூறுகள், வெளிநாட்டு நாணயத்தாள்கள் எவையேனும் கமத்தொழில் அல்லது தோட்ட வேளாண்மை உற்பத்திப்பொருட்கள் அல்லது வணிகப் பொருட்கள் என்று பொருளாகும். ஆனால், பதனிடப்பட்டு மீள் ஏற்றுமதிசெய்வதற்கான நோக்கத்துக்காக இறக்குமதிசெய்யப்படும் வைரக்கற்கள், இரத்தினக்கற்கள், தங்கம், ஆபரணங்கள் மற்றும் இலத்திரனியற் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்காது.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**11**. (1) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2010, யூன் 1 ஆந் தேதியிலிருந்து வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2010, மே 12 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2010, செத்தெம்பர் 8 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங் களுக்காகவும் 2010, சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**12.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாகக் கருதப்படுதல் வேண்டும். இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நடைமுறை.

**13.** அத்தகைய பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற்கேழ்வுப் பெறுமதி என்பவற்றின்மீது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான ஐந்து சதவீதத்திற்குச் சமமாக இருக்கின்றதான அத்தகைய தொகை மீதான அறவீடு ஏதேனும் பொருளொன்றை இறக்குமதிசெய்கின்ற ஆளொரு வரிடமிருந்து, 2011, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினாற் சேகரிக்கப்பட்டுள்ள விடத்து, அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்களுக் காகவும், செல்லுபடியாகச் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப் படுவதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர் பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக் கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றது. நட்டோத்தரவாதம்.

**14.** (1) இச்சட்டத்தினால் விதிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அல்லது இச்சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றவாறான அல்லது அதிகாரமளிக்கப்படு கின்றவாறான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு மென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

## பாகம் II

### 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் I இனைத் திருத்துதல்

*2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**15**. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவானது (பாகம் I) அப்பிரிவிற்கான முதலாவது காப்புவாசகத்தில், அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஈ) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி 2010, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப் பகுதிக்கு 5.0 சதவீதப்படியான அறவீடொன்றும்.".

*2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I ஏற்புடைய தாதலாகாது.*

**16**. துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுக் கொடுப்பனவு தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய்கொண்டதும் இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படுகின்றதுமான ஏதேனும் பொருளிற்கு 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏற்புடைய தாதல் ஆகாது என இத்தால் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக வெளிப் படுத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்